ஒன்று கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா என்பது. அரசின் ஆய்விலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டு 713 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் ஒப்புதல் அளித்துள்ளது என்று விடையளித்தேன். அது தாராபுரம் பகுதிக்கு அதிகமான அளவில் பயன் தரக்கூடிய ஒன்றாக இருக்கிறது. ஆகவே நீங்கள் குறிப்பிட்டு பெருந்துறை பகுதிக்கு என்னென்ன திட்டங்கள் இருக்கிறது, இந்த நொய்யலாற்றின் அணை மூலம் அதற்கு ஏதாவது பயன் கிடைக்குமா என்று தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் தரப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, தாராபுரம் தொகுதியைப் பொறுத்த வரையில் ஏற்கனவே பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டமும் வேறு பல பாசன வசதிகளும் இருக்கின்றன. ஆனால் பெருந்துறையைப் பொறுத்த வரையில் ஆறு பஞ்சாயத்து நீங்கலாக, எந்தவிதமான பாசன வசதியும் இல்லை. ஆகவே, இதை அரசு மீண்டும் பரிசீலிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஆற்றின் போக்கை மாற்றுவதற்கு நமக்கு உரிமை கிடையாது. அணை கட்டும் காரணமே நீர் வளத்தை தேக்கிவைத்து நீர் பற்றாக்குறை காலங்களில் பயன்படுத்துவதற்காகத்தான். ஆகவே ஆற்றின் போக்கை வைத்துக் தான் திட்டங்களை நிறைவேற்ற முடியும். பெருந்துறை பகுதி வறண்ட பகுதி என்பதற்காகத்தான் அதற்கென்று வேறு பல திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. இந்தக் கேள்விக்கு அது சம்பந்தம் இல்லாதது, இங்கே சொல்லக் கூடாது என்பதற்காக தான், தனிக் கேள்வியாகப் போடும்படி உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டேன். தனியாக கேள்விப் போட்டால் என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவிக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சர்க்கரை மீது விதிக்கப்படும் வரி.

*வினா எண். 56—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குவிண்டால் சீனிக்கு மத்திய அரசு விதிக்கும் கலால் வரி அல்லது சுங்க வரி எவ்வளவு ?

(ஆ) இவ் வரியைக் குறைத்து வசூல் செய்யும்படி மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

1982 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) (1) லெவி சர்க்கரைக்கு ஆலைவாயில் விலையில் 13.175 சதவீதம்.

(2) வெளிச் சந்தைச் சர்க்கரைக்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் வரி விதிப்பு மதிப்பில் (Tariff Value) 15.9 சதவீதம்.

(ஆ) இல்லை.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, மக்கள் உபயோகப்படுத்தக் கூடிய அத்தியாவசியப் பொருள்களின் விலை நால் பணம் என்று சொன்னால், அதற்கு போடக் கூடிய கலால் வரி, சுங்க வரி 3/4 பணம் என்ற வகையில் மக்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே இத்தகைய அத்தியாவசியப் பொருள்கள் மீது போடப்பட்டிருக்கும் கலால் வரி, சுங்க வரிகளை மத்திய அரசு நீக்க வேண்டும் என்று மாநில அரசு ஏதாவது எழுதி இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இதுவரையில் எதுவும் எழுதவில்லை.

குளச்சல் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மணல்.

*வினா எண். 57—திருவாளர்கள் திரு. ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் குளச்சல் துறைமுகத்தில் 1979–80 மற்றும் 1980–81-ல் மணவாளக்குறிச்சியிலிருந்து சேகரிக்கும் மணல் (மோனசைட்) எவ்வளவு ஏற்றுமதியாயிற்று?

(ஆ) இதில் அயல்நாடுகளுக்கு எவ்வளவு ஏற்றுமதியாகி உள்ளது?

(இ) இதனால் கிடைத்த அயல்நாட்டு செலாவணி எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) குமரி மாவட்டத்தில் குளச்சல் துறைமுகத்திலிருந்து மோனசைட் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனால் அங்கிருந்து ஆல்வாய்க்கு அனுப்பப்படுகின்றது.

(ஆ) பதில் எழவில்லை.

(இ) பதில் எழவில்லை.